இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

Invest in Sri Lanka

Sri Lanka Tourism

Development Authority

சுற்றுலா அபிவிருத்தி நிதியம்

2011

வருடாந்த அறிக்கை

2012 மே 25.

கௌரவ பசில் ராஜபக்ஷ, பா.உ.,
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.

கௌரவ அமைச்சர்,

சுற்றுலா அபிவிருத்தி நிதியம்

2005 ஆம் ஆண்டின் இலக்கம் 38 கொண்ட சுற்றுலா அபிவிருத்தி சட்டத்தின் 23 (1) பிரிவுக்கு அமைய சுற்றுலா அபிவிருத்தி நிதியம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் இந்த நிதியத்தின் நிதி சுற்றுலா அபிவிருத்தி மற்றும் முன்னேற்றங்களுக்காகச் செலவிடப்பட வேண்டும். இந்நிதியத்திற்காக நிதி சேகரித்தல் மற்றும் விநியோகம் 2003 இலக்கம் 28 கொண்ட நிதி சட்டம் மற்றும் 2005 இலக்கம் 38 கொண்ட சுற்றுலா சட்டத்திற்கு அமைய தீர்மானிக்கப்படுகிறது.

2005 இலக்கம் 38 கொண்ட சுற்றுலா சட்டத்தில் 23(2) (அ) பிரிவுக்கு அமைய சுற்றுலா புறப்படுகை வரி வருமானத்தில் 1/3 அளவு சிவில் விமான சேவை அதிகார சபையினால் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தப்படுகிறது. மேலும் சுற்றுலாத் துறைக்குரிய நிறுவனங்களில் காலாண்டு அடிப்படையில் சுற்றுலா அபிவிருத்தி வரியும் இந்நிதியத்தில் சேர்க்கப்படுகின்றது.

2011 ஜனவரி தொடக்கம் டிசம்பர் 31 வரையான கால எல்லைக்குரிய சுற்றுலா அபிவிருத்தி நிதி மூலங்களின் மொத்தம் ரூபா 1695.1 மில்லியன் ஆகும். 2010 ஆம் ஆண்டில் இந்நிதியின் அளவு 1517.01 ஆகும்.

இவ்வறிக்கையின் மூலம் 2011 ஆம் ஆண்டுக்காக சுற்றுலா அபிவிருத்தி நிதியத்திற்கு நிதி சேகரித்தல் மற்றும் நிதி வழங்கல் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இப்படிக்கு,
நம்பிக்கையுள்ள,

ஒப்பம்.
விபுல வனிகசேகர,
பதில் பணிப்பாயர் நாயகம்,
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை.

உள்ளடக்கம்

- நிதி வெளிப்பாடுகள்

- கணக்காய்வாளர் அறிக்கை

<u>நிலையியற் சபைத் தகவல்கள்</u>

நிதியத்தின் பெயர்	சுற்றுலா அபிவிருத்தி நிதியம்
சட்டக் கோட்பாடு	2005 ஆம் ஆண்டு இலக்கம் 38 கொண்ட சுற்றுலா சட்டத்தின் 23 (1) பிரிவின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.
நிதியத்தின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம்	இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
கணக்காய்வாளர்	கணக்காய்வுத் திணைக்களம், கொழும்பு - 07.
வங்கியாளர்	இலங்கை வங்கி, கொழும்பு - 01.

நிதி வெளிப்பாடுகளின் உள்ளடகம்

	பக்க இலக்கம்
நிதி நிலைமைகள் தொடர்பான வெளிப்பாடுகள்	01
நிதிச் செயற்சாதனை தொடர்பான வெளிப்பாடுகள்	02
நிதிப்பாய்ச்சல் கூற்று	03
கணக்குகளுக்குரிய குறிப்புக்கள்	04

சுற்றுலா அபிவிருத்தி நிதியம்
நிதி நிலைமமகள் தொடர்பான வெளிப்பாடுகள்
2011 டிசம்பர் 31 ஆந் திகதியன்று

	குறிப்பு	2011 ரூ.	2010 ரூ.
நடைமுறைச் சொத்துக்கள்			
நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகள்		138,067,762.60	85,154,824.63
கிடைக்க வேண்டிய நிதி	8	341,571,004.93	350,340,624.99
மொத்த சொத்துக்கள்		**479,638,767.53**	**435,495,449.62**
நடைமுறைப் பொறுப்புக்கள்			
செலுத்த வேண்டிய நிதி வகைகள்	9	1,619,289.73	59,940.00
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை		66,922,726.88	61,892,703.52
இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்		334,613,634.44	304,046,470.07
இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்		57,362,337.37	52,122,252.04
இலங்கை இணக்கப்பாட்டுப் பணியகம்		19,120,779.11	17,374,083.99
மொத்த பொறுப்புக்கள்		**479,638,767.53**	**435,495,449.62**

ஒப்பம்.
கலாநிதி நாலக கொடஹேவா
தலைவர்
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

ஒப்பம்.
பீ.என். திசாநாயக்க
பணிப்பாளர் / நிதி முகாமை
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

சுற்றுலா அபிவிருத்தி நிதியம்

நிதிச் செயற்சாதனை வெளிப்பாடுகள்

2011 டிசம்பர் 31 ஆந் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான

		2011	2010
	குறிப்பு	ரூபா	ரூபா
வருமானம்			
வரி	3	1,691,346,520.87	1,513,391,234.60
ஏனைய வருமானம்	4	3,842,679.71	3,628,651.14
மொத்த வருமானம்		**1,695,189,200.58**	**1,517,019,885.74**
செலவினம்			
நிதியத்தின் நிர்வாகச் செலவினம்	5	3,343,507.72	2,908,287.21
நிதிச் செலவினம்	6	396,511.88	784,385.48
நிதியத்தின் விநியோகம்	7	1,691,449,180.98	1,513,327,213.05
மொத்த செலவினம்		**1,695,189,200.58**	**1,517,019,885.74**
மிகை (குறைவு) கால எல்லைக்காக		-	-

சுற்றுலா அபிவிருத்தி நிதியம்
நிதிப்பாய்ச்சல் கூற்று
2011 டிசம்பர் 31 ஆந் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான

	2011 ரூபா.
செயற்பாடுகள் ஊடான நிதிப் பாய்ச்சல்	
தேறிய மிகை (குறைவு) செயற்பாடுகள் ஊடாக	-

செயற்பாட்டு மூலதன வித்தியாசம் - நிதி உட்பாய்ச்சல் (வெளிப்பாய்ச்சல்)

அதிகரிப்பு / குறைவு நிதி கிடைப்பனவு	8,769,620.06
அதிகரிப்பு / குறைவு நிதி கொடுப்பனவு	44,143,317.91
செயற்பாடுகள் ஊடான தேறிய நிதிப் பாய்ச்சல்	52,912,937.97
ஆரம்ப கால எல்லைக்கான நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகள்	**85,154,824.63**
இறுதி கால எல்லைக்கான நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகள்	**138,067,762.60**

கணக்குகளுக்குரிய குறிப்புக்கள்

1. சுற்றுலா அபிவிருத்தி நிதியம்

2005 ஆம் ஆண்டு இலக்கம் 38 கொண்ட சுற்றுலா சட்ட வாசக இலக்கம் 23 (1) இன் கீழ் சுற்றுலா அபிவிருத்தி நிதியம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்நிதியம் சுற்றுலாத் துறையின் முன்னேற்றம் மற்றும் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. சுற்றுலா அபிவிருத்தி நிதியத்திற்கு நிதி சேகரித்தல் மற்றும் வழங்கல் 2003 இலக்கம் 28 கொண்ட நிதி சட்டம் மற்றும் 2005 இலக்கம் 38 கொண்ட சுற்றுலா சட்டத்திற்கு அமைய மேற்கொள்ள வேண்டும்.

2. கணக்குகளின் தேவை

இந்நிதியத்தின் கணக்குச் செயற்பாடுகள் இலங்கை கணக்கீட்டுத் தரம் மற்றும் இலங்கை அரசின் நிதிய கணக்கீட்டுத் தரங்களுக்கு அமைய மேற்கொள்ளப்படுகின்றது.

3. வரி - நிதியத்தின் வளம்

	2011 ரூபா.	2010 ரூபா.
புறப்படுகை வரி	1,041,678,481.63	1,000,077,336.72
சுற்றுலா அபிவிருத்தி வரி	649,668,039.24	516,942,546.02
மொத்தம்	**1,691,346,520.87**	**1,517,019,882.74**

3.1. புறப்படுகை வரி

2005 இல. 38 கொண்ட சுற்றுலா சட்டத்தின் 23(2)(அ) வாசகத்தின் கீழ் புறப்படுகை வரியில் இருந்து 1/3 பகுதி இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு சிவில் விமான சேவை அதிகார சபையினால் செலுத்தப்படுகின்றது.

புறப்படுகை வரி	**ரூ.**
2011 ஜன. - ஒக். புறப்படுகை வரிக் கிடைப்பனவு	865,304,781.87
2011 ஆம் ஆண்டுக்கு புறப்படுகை வரி கிடைக்க வேண்டியவை (ஒதுக்கீடு)	176,373,699.76
2011 ஆம் ஆண்டுக்காக புறப்படுகை வரியின் மொத்தம்	**1,041,678,481.63**

3.2. சுற்றுலா அபிவிருத்தி வரி

2005 இல. 28 கொண்ட நிதிச் சட்டத்தின் கீழ் சுற்றுலாத் துறையின் கீழுள்ள சகல நிறுவனங்களும் சுற்றுலா அபிவிருத்தி வரியினைச் செலுத்த வேண்டும் இச்சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தினைச் சேகரித்தல் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டு சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தில் வைப்பிலிடப்படுகிறது. 2011 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான கால எல்லைக்குள் சேகரிக்கப்பட்ட சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் வரி அளவு 443.83 மில்லியன் ரூபாவாகும். மேலும் 2011 ஒக்டோபர் - டிசம்பர் வரையான காலத்துக்குள் கிடைக்க வேண்டிய நிதி (மதிப்பீடு) அளவு 165 மில்லியன் ரூபாவாகும்.

சுற்றுலா அபிவிருத்தி வரி	**ரூபா**
2011 ஜன. - டிச. வரையில் கிடைக்கப்பெற்ற மூலங்கள்	443,835,945.00
2011 ஒக்டோபர் - டிசம்பர் வரையில் கிடைக்கப்பெற்ற மூலங்கள்	165,000,000.00
முன்னைய ஆண்டுக்காக கிடைக்கப்பெற்ற மூலங்கள்	41,722,418.29
சுற்றுலா அபிவிருத்தி வரி மீள் கொடுப்பனவு	(890,324.05)
2011 ஜனவரி - டிசம்பர் வரை சுற்றுலா அபிவிருத்தி வரி	**649,668,039.24**

3.2.1 முன்னைய ஆண்டின் வருமானம்

2010 ஆம் ஆண்டுக்காக சுற்றுலா அபிவிருத்தி மூலங்களில் இருந்து கிடைக்க வேண்டிய மதிப்பீட்டு அளவு ரூபா.124,000,000.00 இவ்வாண்டில் கிடைக்கப்பெற்றது. இருப்பினும் உண்மையாக இக்கால எல்லைக்காக கிடைக்கப்பெற்ற நிதியின் அளவு ரூபா. 165, 722,418.29 ஆகும். இதற்கமைய குறைமதிப்பீடு செய்யப்பட்ட அளவு ரூபா. 41,722,418.29 ஆகும். 2011 ஆம் ஆண்டின் கணக்கினைத் தயாரிக்கும் போது இவ்வாறு இனங்காணப்பட்ட நிதி மாற்றத்தின் அளவு நடப்பாண்டில் வருமானமாகக் கருதப்பட்டுள்ளது.

4. ஏனைய வருமானம்

நிதிச் சட்டத்துக்கு அமைய சுற்றுலா வரி செலுத்தாத நிறுவனங்களிலிருந்து வரி அறவீடு செய்யும் போது வரி மட்டுப்பாட்டு விகிதாசாரம் கிடைக்கக் கூடிய வட்டிக்கு மேலதிக வருமானமாக நிதியத்துக்குக் கிடைக்கப்பெறுகிறது.

	ரூபா.
2011 ஆம் ஆண்டுக்கான வரி தாமதத்தின் மீதான வட்டி	3,842,572.71
மேலதிக கிடைப்பனவு / மறுக்கப்பட்ட காசோலை உரிமையாளரிடமிருந்து	107.00
மொத்தம்	**3,842,679.71**

5. நிதியத்தின் நிர்வாகச் செலவினம்

	2011 ரூபா.	2010 ரூபா.
முத்திரைக் கட்டணம்	45,450.00	37,825.00
நிருவாகச் செலவினம்	3,268,797.72	2,788,892.21
கணக்காய்வுக் கட்டணம்	29,100.00	81,570.00
தபால் கட்டணம்	160.00	-
மொத்தம்	**3,343,507.72**	**2,908,287.21**

6. நிதிச் செலவினம்

	2011 ரூபா.	2010 ரூபா.
பற்று வரி	385,051.83	774,790.31
வங்கிக் கட்டணம்	11,460.00	9,595.17
மொத்தம்	**396,511.83**	**784,385.48**

7. நிதியத்தின் விநியோகங்கள்

2005 இல. 38 கொண்ட சுற்றுலா சட்டத்தின் 24(8) வாசகத்துக்கு அமைய நிதியத்திற்கு சேகரிக்கப்பட்ட நிதியின் மூலம் விநியோகிக்கப்படுகின்றது.

	2011 ரூபா.	2010 ரூபா.
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை	236,802,885.34	211,865,811.89
இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்	1,184,014,426.66	1,059,329,045.53
இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்	202,973,901.73	181,599,267.24
இலங்கை உடன்பாட்டுப் பணியகம்	67,657,967.25	60,533,088.39
மொத்தம்	**1,691,449,180.98**	**1,513,327,213.05**

8. கிடைக்க வேண்டி நிதி வகைகள்

	2011 ரூபா.	2010 ரூபா.
கிடைக்க வேண்டிய புறப்படுகை வரி	176,373,699.76	225,467,381.82
கிடைக்க வேண்டிய சுற்றுலா அபிவிருத்தி வரி	165,000,000.00	124,000,000.00
கடன்படுநர்	197,305.17	873,243.17
மொத்தம்	**341,571,004.93**	**350,340,624.99**

9. செலுத்த வேண்டிய நிதி மூலங்கள்

	2011 ரூபா.	2010 ரூபா.
திரண்ட செலவினம் - நிர்வாகக் கட்டணம்	1,515,338.82	1,045,584.52
திரண்ட செலவினம் - கணக்காய்வுக் கட்டணம்	29,100.00	59,940.00
திரண்ட செலவினம் - முத்திரைக் கட்டணம்	17,500.00	37,825.00
ஏனைய நடைமுறைப் பொறுப்புக்கள்	57,350.91	-
மொத்தம்	**1,619,289.73**	**1,143,349.52**

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல ரீஎம் ஏ ரீடீஎப்
My No. எப்ஏ 2011

ඔබේ අංකය
உமது இல
No.

දිනය
திகதி 2012 மே 31
Date

தலைவர்,

இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபை.

சுற்றுலாத்துறை அபிவிருத்தி நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

சுற்றுலாத்துறை அபிவிருத்தி நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள், ஏனைய விளக்கத் தகவல்கள் என்பனவற்றின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2003 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2. **<u>நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு</u>**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையாக பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கின்ற அத்தகைய உள்ளகக் குடப்பாடுகள் என்பனவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3. **<u>கணக்காய்வின் பொறுப்புக்கள்</u>**

எனது கணக்காய்வுக்கமைய இந்நிதி வெளிப்பாடுகள் தொடர்பான கருத்துக்களைத் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் இலங்கை கணக்கீட்டுத் தரங்களுக்கு அமைய எனது கணக்காய்வுகள் செய்யப்பட்டன. விழுமியங்களின் தேவைகளுக்கு அமைவாக மற்றும் நிதி வெளிப்பாடுகள் போலியான வெளிப்பாடுகள் அற்றது என்பது தொடர்பாக நியாயமாக உறுதியினைப் பெற்றுக் கொள்ளும் வகையில் கணக்காய்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதாக இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுதல்களின்

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத්தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka
දුරකථනය தொலைபேசி Telephone. 0112887028 -34
ෆැක්ස් අංකය பக்ஸ் இல Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් ஈ- மெயில் E-mail. oaggov@sltnet.lk

காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொண்மையான பிறழ் அல்லது ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கடப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கண்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கிட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல்களை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பொற்றுக் கொண்டுள்ளேன் என நம்புகிறேன்.

1.4. அபிப்பிராயத்திற்கான அடிப்படை

அந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள

2. நிதி வெளிப்பாடுகள்

2.1. கருத்துரைகள்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விளக்கப்பட்டுள்ள வாசகத்தின் தாக்கத்தினைத் தவிர்த்து சுற்றுலாத்துறை அபிவிருத்தி நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்லினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1. பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

ரூபா 142,504 பெறுமதியான 07 மதிப்பிழந்த காசோலைகள் 02 ஆண்டுகளிலிருந்து 07 ஆண்டுகள் வரையான வீச்சுடைய காலமாக நிலுவையாகக் காணப்பட்ட

போதிலும் நிதிப்பிரமாணம் 189 இன் பிரகாரம் இக்காசோலைகளின் பெறுமதியினை அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2. <u>சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பனவற்றுடன் இணக்கமின்மை</u>

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அதிகாரச் சட்டத்தின் 24(2) உறுப்புரைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2003 இல. 25 கொண்ட நிதிச் சட்டத்தின் II பகுதிக்கு இணங்க சுற்றுலா வரி அறவீட்டின் அறிக்கை சுற்றுலா அபிவிருத்தி வரி அறவீடுகள் 30 நாட்களுக்குள் பொதுத் திறைசேரியின் பிரதிச் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்வாறிருந்த போதிலும் இந்நிதியம் உரிய நியமங்களுக்க அமைய மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) 2005 இல. 38 கொண்ட சுற்றுலா அதிகாரச் சட்டத்தின் 24(2) உறுப்புரைகளின் ஏற்பாடுகளுக்கு அமைய வரிக் கொடுப்பனவு தொடர்பான விபரங்களைக் குறிப்பிடும் ஆவணங்கள் பேணப்பட்டிருக்கவில்லை.

3. <u>நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு</u>

3.1. <u>நிதிசார் விளைவுகள்</u>

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு நிதியத்தின் நடவடிக்கைகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் ரூபா 1,695 மில்லியனாக இருந்ததுடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டிற்கான தொடர்புபட்ட வருமானம் ரூபா 1,517 மில்லியனாக இருந்தமையானது நிதிசார் விளைவுகளில் ரூபா 178 மில்லியன் தொகையினால் முன்னேற்றத்திற்காக சுட்டிக்காட்டுகின்றது.

3.2. <u>நிதியத்தினை முகாமை செய்தல்</u>

2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத் துறை அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். நிதியத்தின் முகாமைத்துவம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஒவ்வொரு உத்தரவு பெற்ற நிறுவனத்தின் புரள்வு மீது 2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றுலாத்துறை அபிவிருத்தி தீர்வை சேகரிக்கப்படுதல் வேண்டும் என்றும் 2,372 உத்தரவுபெற்ற நிறுவனங்களில் 1089 உத்தரவுபெற்ற நிறுவனங்களிடமிருந்து சுற்றுலாத்துறை அபிவிருத்தித் தீர்வை சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு அறிக்கையின்றி ரூபா 492,490 சுற்றுலா அபிவிருத்தி வரி செலுத்தியோருக்கு மீளச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) நிதியத்தின் மூலம் நிர்வாகச் செலவினமாக ரூபா 3,353,507 நிதி இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறிருந்த போதிலும் நிர்வாகச் செலவினத்தினைச் செலுத்த 2005 இல. 38 கொண்ட சுற்றுலாச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் 2012 மே 02 ஆம் திகதி கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு எனக்கு அறிக்கைப்படுத்தியிருந்தார்.

"அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் சுற்றுலாத்துறை அபிவிருத்தி நிதியமானது இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்வகிக்கப்பட்டு முகாமை செய்யப்படுதல் வேண்டும். இந்நோக்கத்திற்காக ஊழியர்களின் சம்பளங்கள், தரவு செயன்முறைப்படுத்தல் சொத்துக்களினக் பெறுமானத்தேய்வு,ஏழுதுகருவிகள் முதலியவாறான செலவுகளை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபை மேற்கொள்கின்றது, அத்துடன் நிதியத்திலிருந்து பண அளிப்புக்களைப் பெறுகின்ற வேறு எந்த நிறுவனமும் செலவுகளை மேற்கொள்ளமாட்டாது. இந்த விடயத்தைக் கருத்திற்கொண்டு அனைத்து நான்கு நிறுவனங்களும் பகிர்ந்து கொள்ளக் கூடியவகையில் நிதியத்திலிருந்து நியாயமான கட்டணம் ஒன்றினை அறவிடுவதற்கு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் இயக்குனர் சபை தீர்மானித்திருந்தது"

3.3. உள்ளகக் கணக்காய்வு

நிதியத்தின் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையின் உள்ளக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. எனினும் நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் எதுவும் மீளாய்வாண்டின் போது மேற்கூறிய கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4. முறைமை மற்றும் நிர்வாகம்

கணக்காய்வு முறைமை மற்றும் நிர்வாகக் குறைபாடுகள் இடைக்கிடையே அதிகார சபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. கீழ்க்குறிப்பிடப்பட்ட நிர்வாகத் துறைகள் மீது விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிகளை பகிர்ந்தளித்தல்

(இ) சுற்றுலாத்துறை அபிழவிருத்தி தீர்வைகளின் சேகரிப்பு

(ஈ) உத்தரவுப் பத்திரங்களை வழங்குதல்

(உ) உத்தரவுபெற்ற நிறுவனங்களின் நித்க்கூற்றுக்களை மீளாய்வு செய்தல்.

ஒப்பம். : எச்.ஏ.எஸ். சமரவீர,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.